THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Wednesday, the 2nd December 1970

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU C.P. CHITRARASU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

MR. CHAIRMAN : Private Notice Question 1 and Starred Questions 31 to 33 are postponed.

Cycle Assembly Unit, Thanjavur

*34Q. THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) the amount invested for the Cycle Assembly Unit in the Industrial Estate, Thanjavur ;

(*b*) the number of cycles manufactured and sold by the Unit year-wise, since it started functioning ; and

(*c*) whether the unit is working at a profit ?

தஞ்சாவூர் சைக்கிள் பாகங்கள் இணைப்புத் தொழிற்சாலை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர், தொழிற்பேட்டையிலுள்ள ''சைக்கிள் பாகங்கள் இணைப்புத் தொழிற்சாலைக்''காக முதலீடு செய்யப்பட்ட தொகை யாது ?

(இ) செயல்படத் தொடங்கியது முதல் இத்தொழிற்சாலையினுல் தயாரிக்கப்பட்டு விற்கப்பட்ட சைக்கிள்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக எவ்வளவு ?

(உ) இத்தொழிற்சாலை ஆதாயத்தில் செயல்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : விவர அறிக்கை† ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

† Printed as Appendix I

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஆண்டுக்கு ஆண்டு இந்தத் தொழிலகத்தில் சைக்கிள் விற்பனை குறைந்து கொண்டே வருவதற்கான காரணம் என்ன ? 1969-ஆம் ஆண்டில் ஒரு சைக்கிள் இணைப்பு கூட நடைபெறவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் அந்தத் தொழிலகத்தில் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்றாவது சொல்ல முடியுமா ? ஒரு சைக்கிள் கூட அங்கே இணைக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்தத் தொழிற்சாலை சைக்கிள் உற்பத்தித் தொழிற்சாலை அன்று என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். இது 'அசெம்பிளி' செய்கிற ஒரு தொழிற்சாலை. இந்தத் தொழிற்சாலையில் முதலில் கிட்டத்தட்ட 600-ல் ஆரம்பித்து 1,000, 1,500 என்று பெருகி, பிறகு அது குறைந்து வந்திருக்கிறது. இப்போது இந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடைபெறுகிறதா என்று புனராலோசனை செய்ய வேண்டும் என்று அரசு முடிவுக்கு வந்திருக்கிறது. அந்த நிலைமையின் காரணமாக அங்கே உற்பத்தி செய்யவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : இது இணைப்பு செய்யும் தொழிற்சாலை தான் என்றாலும், அது முதலில் 1,600, 1,700 என்ற அளவுக்கு உயர்ந்து பிறகு குறைந்து போயிருக்கிறது. இப்போது ஒரு சைக்கிள் கூட இணைப்பு செய்யப்படவில்லை என்று தெரிகிறது. மற்ற சைக்கிள்களின் விற்பனை எண்ணிக்கை உயர்ந்து வரும்போது அரசாங்கத்தால் தயாரிக்கப்படும் சைக்கிள் ஒன்றுகூட விற்காமல் இருப்பதற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அரசாங்கத்தில் தயாரிக்கப்படும் சைக்கிளுக்கு அவ்வளவு மதிப்பு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக் கொண்டதற்கு நன்றி. ஆனால் அரசாங்கத் தொழிலகத்தில் இணைக்கப்படுகிற சைக்கிளுக்கு அதிக வாய்ப்பில்லை என்றுதான் நான் எண்ணுகிறேன். ஆகவே இதுபற்றிப் புனராலோசனை செய்துகொண்டிருக்கிறோம்.

State Transport Buses

***35. Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :**

(*a*) whether buses run by the Tamil Nadu State Transport Department are covered by permits under the Madras Motor Vehicles Rules, 1940 ;

(*b*) whether there is any condition in the permit about the number of passengers to be carried ;

(*c*) whether it is being followed in Madras City ; and

(*d*) if not, the reasons therefor ?